# பாராளுமன்ற பொதுத் தேர்தல்

# 2015

## பாராளுமன்ற பொதுத் தேர்தலொன்றை நடத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றிய சட்ட ரீதியான ஆய்வு

பஃவ்ரல்

சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற பொதுத் தேர்தல்

# 2015

## பாராளுமன்ற பொதுத் தேர்தலொன்றை நடத்தும் போது கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் பற்றிய சட்ட ரீதியான ஆய்வு

பஃவ்ரல்

வெளியீடு
சுதந்திரமானதும் நியாயமானதுமான
தேர்தலுக்கான மக்கள் செயற்பாடு
(PAFFREL)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிமுகம்

### நாடாளுமன்றத் தேர்தலும் மக்களும்

இலங்கையில் அமுலிலுள்ள 1978 அரசியலமைப்பின் 3 வது உறுப்புரையின்படி "குடியரசில் இறைமை" மக்களுக்குரியதாகும். "இறைமை" எனப்படுவது நாடொன்றிற்கான சட்டங்களை ஆக்குவதற்கும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கும் அத்தோடு அந்நாட்டில் சட்டத்தையும் நீதியையும் நிலைநாட்டுவதற்குரிய அதிகாரமாகும். நாம் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் முன்னேற்றம் கண்ட சனநாயக ஆட்சி முறையில் ஆட்சி அதிகாரங்கள் மக்களால் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அரசியலமைப்பின் மேற்படி வாசகம் கோடிட்டுக் காட்டுகிறது. இறைமையின் கீழ் மேற்சொல்லப்பட்ட ஆட்சியதிகாரங்களுடன் அடிப்படை உரிமைகளும் வாக்குரிமையும் சேர்க்கப்பட்டுள்ளதானது அதை மேலும் அர்த்தப்படுத்துகிறது.

மக்கள் ஆட்சி முறைமையின் தொடக்கத்தில் அனைத்துப் பிரசைகளும் இணைந்து இந்த ஆட்சி முறைமையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தி வந்துள்ளதோடு சமூக அமைப்பு முறை சிக்கலானதையடுத்து பிரதிநிதித்துவ சனநாயக முறை ஆரம்பமாகியுள்ளது. அதாவது எங்கள் சார்பில் எமக்குரிய ஆட்சி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இன்று எமது பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே தேர்தல் எனப்படுவது இச்செயற்பாட்டில் "மக்களுக்குரிய இறைமை" மக்கள் பிரதிநிதிகளிடம் முறையாக ஒப்படைக்கப்படுதலாகும். அவ்வாறு நோக்குமிடத்து பாராளுமன்ற தேர்தல் என்பதன் பொருள் மக்களுக்குச் சொந்தமான சட்டங்களை ஆக்கும் அதிகாரத்தை அதாவது சட்டவாக்க அதிகாரத்தை மக்கள் பிரதிநிதிகளிடம் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் கையளிக்கும் செயற்பாடாகும். சனநாயக வரம்பினுள் அரசியல் கட்சிகளையும் குழுக்களையும் சேர்ந்த பெரும் எண்ணிக்கையான வேட்பாளர்கள் தேர்தலொன்றில் களமிறங்குவதன் காரணமாக மிகச் சிறந்த பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டினுள் சனநாயகமும், நல்லாட்சியும் நடைமுறைப்படுத்தப்படுமாயின் உண்மையாக மக்கள் பிரதிநிதிகளின் தெரிவு இடம்பெற வேண்டும். எனவே உண்மையாகவே மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவதும் அவரகளின் நம்பிக்கையை வென்றெடுப்பதுமான பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட வேண்டும். அப்படியாயின் இவர்களைத் தெரிவுசெய்வதற்கான தேர்தல்,சுதந்திரமானதும் நீதியானதுமானதாக இருக்க வேண்டும். ஊழல் மற்றும் தேர்தல் சட்டங்களை மீறி நடத்தப்படும் தேர்தல்கள் ஒருபோதும் சுதந்திரமானதாகவோ அல்லது நீதியானதாகவோ அமையாது.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலொன்றுக்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் பற்றிய சிறந்த அறிவை தேர்தலுடன் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு வழங்குவதையே இச்சிறு நூலின் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. அது சனநாயகமும் நல்லாட்சியும் நடைமுறைப்படுத்தும் ஒரு நாட்டிற்கு அவசியமான ஒன்றாகும்.

**இலங்கை நாடாளுமன்ற தேர்தல்கள் சட்டம்**

நாடாளுமன்ற தேர்தலொன்றில் உறுப்பினர்களைத் தெரிவு செய்வது தொடர்பான நடைமுறைகள் மற்றும் தேர்தல் நடவடிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட சட்டமானது இலங்கையில் பல கட்டளைச் சட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. **அரசியலமைப்பு – 88 -104 உறுப்புரைகள்.**
2. **நாடாளுமன்றத் தேர்தல்கள் சட்டம்.**

இலங்கை நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான சட்டம் பிரதானமாக 1981 ஆம் ஆண்டு 01ஆம் இலக்க நாடாளுமன்றத் தேர்தல் சட்டத்தினையும் அதன் மீதான பின்வரும் திருத்தங்களையும் கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1988ஆம் ஆண்டு 15 இலக்க நாடாளுமன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 1988ஆம் ஆண்டு 29 இலக்க நாடாளுமன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 1988ஆம் ஆண்டு 54 இலக்க நாடாளுமன்றத் தேர்தல் (திருத்தச்) சட்டம்
- 1988ஆம் ஆண்டு 35 இலக்க வாக்கெடுப்பு (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

**3. சட்ட ரீதியான வேறு ஏற்பாடுகள்**

- தண்டனைச் சட்டக்கோவை – 169 அ – ஏ வரையான வாசகங்கள்.
- 2004ஆம் ஆண்டு 14ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டம் - வாக்களிப்பதற்காக தேசிய அடையாள அட்டையை கட்டாயமாக்குதல்.

**4. தேர்தல்கள் ஆணையாளரினால் காலத்துக்குக் காலம் வெளியிடப்படும் கட்டளைகள் சுற்று நிருபங்கள் மற்றும் வர்த்தமானி அறிவித்தல்கள்.**

**5. வழக்குத் தீர்ப்புகள்.**

## 01. நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான பொது ஏற்பாடுகள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசினதும் அரசியலமைப்பின் ×,× ; பிரகாரம் நாடாளுமன்றம் 225 உறுப்பினர்களைக் கொண்டுள்ளதோடு அதில் 196 பேர் தேர்தலொன்றின் மூலமும் 29 பேர் தேசியப்பட்டியல் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியலமைப்பின் ஆம் அத்தியாயங்களில் நாடாளுமன்றத்தின் செயல் நடைமுறையும் உறுப்பினர்களின் சட்டவாக்கத் தத்துவங்களும் கடமைகளும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. தேர்தலொன்றின் போது ஆறு ஆண்டுகளுக்கு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

1978 அரசியலமைப்பில் விகிதாசார பிரதிநிதித்துவ முறை அறிமுகப்படுத்தப்பட்டதன் பின்னர் நாடாளுமன்ற பொதுத்தேர்தலுக்கான உறுப்பினர்கள் விகிதாசார பிரதிநிதித்துவ முறையின்படி தெரிவு செய்யப்படுவார்கள். உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான ஒரு நிர்வாக மாவட்டம் தேர்தல் மாவட்டமாக கருதப்படுவதோடு, அந்த நிர்வாக மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதே மாவட்டத்திலிருந்து தெரிவு செய்ய வேண்டும்.

அட்டவணை 01 – மாவட்டங்களின் அடிப்படையில் தெரிவு செய்ய வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை.

| | | | |
|---|---|---|---|
| 1. | கொழும்பு | – | 19 |
| 2. | கம்பகா | – | 18 |
| 3. | களுத்துறை | – | 10 |
| 4. | கண்டி | – | 12 |
| 5. | மாத்தளை | – | 05 |
| 6. | நுவரெலியா | – | 08 |
| 7. | காலி | – | 10 |
| 8. | மாத்தறை | – | 08 |
| 9. | அம்பாந்தோட்டை | – | 07 |
| 10. | யாழ்ப்பாணம் | – | 07 |
| 11. | வன்னி | – | 06 |
| 12. | திகாமடுல்ல | – | 07 |
| 13. | மட்டக்களப்பு | – | 05 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 14. திருகோணமலை | – | 04 |
| 15. குருணாகல் | – | 15 |
| 16. புத்தளம் | – | 08 |
| 17. அநுராதபுரம் | – | 09 |
| 18. பொலநறுவை | – | 05 |
| 19. பதுளை | – | 08 |
| 20. மொனராகலை | – | 05 |
| 21. இரத்தினபுரி | – | 11 |
| 22. கேகாலை | – | 09 |
| | | 196 |

**ஓர் உறுப்பினராகத் தெரிவாவதற்கான தகுதியீனங்கள்**

அரசியலமைப்பின் 89 மற்றும் 91 (1) ஆம் உறுப்புரைகளில் ஓர் உறுப்பினராகத் தெரிவாவதற்கான தகுதியீனங்கள் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதன்படி பின்வரும் நபர்களுக்கு வேட்பாளராக முடியாது.

1. இலங்கை பிரசை அல்லாதிருத்தல்
2. 18 வயதைப் பூர்த்தி செய்யாத ஒருவராக இருந்தால்
3. இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டத்திற்கமைய சித்தசுவாதீனமற்றவரென தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தால்
4. இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத காலத்திற்கு சிறைப்படுத்த வேண்டிய தவறொன்றுக்கு குற்றவாளியாகி, ஆறு மாதங்களுக்குக் குறையாத மறியற்றண்டனைக்கு ஆளாக்கப்பட்டவர்களும், மரண தண்டனைக்கு பதிலாக மறியற்றண்டனை அனுபவிப்பவர்களும் கடந்த ஏழாண்டுக் காலத்தினுள் அத்தண்டனையை முழுமையாக அனுபவித்தவர்களும் எனினும் நிபந்தனைகளற்ற மன்னிப்பு பெற்றவர்களுக்கு களமிறங்க முடியும்.
5. மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பின் போது சனாதிபதித் தேர்தலின் போது அல்லது நாடாளுமன்றத் தேர்தலின் போது ஏதேனும் சட்டவிரோதச் செயலில் அல்லது ஊழல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளதால் ஒரு நீதிமன்றத்தின் முன்னரான குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழியாதிருத்தல்.

6. இலஞ்ச குற்றச்சாட்டுக்கு தவறாளியாக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கழியாதிருந்தால்
7. உள்ளூராட்சி சபைகள் வாக்கெடுப்புச் சட்டத்தின் கீழ் ஏதேனும் நீதிமன்றத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கழியாதிருந்தால்
8. அரச நிறுவனமொன்றில் ஊழல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டு சட்டத்தால் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஐந்து ஆண்டுகள் கழியாதிருந்தால்
9. மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பொன்றில் சனாதிபதித் தேர்தலொன்றில் அல்லது நாடாளுமன்றத் தேர்தலில் ஏதேனும் சட்டவிரோத செயலுக்கு இசைவான தவறு சம்பந்தமாக குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள் கழியாதிருந்தால்
10. நாடாளுமன்றத்தால் குடியியல் தகுதியீனப் பிரேரணையொன்று நிறைவேற்றப்பட்டு அத்தகுதியீனக் காலம் முடிவுறாதிருந்தால்
11. பொய்யான சாட்சியமளித்தல், தவறொன்று தொடர்பான தகவல்களை அறிவித்தல், தவறு தொடர்பான போலித்தகவலளித்தல், சாட்சிகளை விசாரணை செய்யும் போது தேவைப்படும் ஆவணங்கள் அல்லது பொருட்களை அழித்தலுடன் தொடர்புடைய தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கழியாதிருந்தால்
12. உயர் நீதிமன்ற, மேன்முறையீட்டு நீதிமன்ற, மேல் நீதிமன்ற அல்லது மாவட்ட நீதிமன்றத்தின் எவரேனும் நீதிபதியை உள்ளடக்கிய விசேட சனாதிபதி ஆணைக்குழுவின் முன்தோன்றாத உறுதி மொழியை அல்லது சத்தியப்பிரமாணத்தைச் செய்ய மறுக்கும் கேட்ட கேள்விக்கு பதில் கூற மறுக்கும் மற்றும் தன்வசமுள்ள ஆவணங்கள் பொருட்கள் அல்லது தகவல்களைச் சமர்ப்பிக்காமை போன்றவற்றால் ஆணைக்குழுவை அவமதித்த தவறுக்கு குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டு ஏழு ஆண்டுகள் கழியாதிருந்தால்
13. சனாதிபதிப் பதவி வகிப்பவராதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நீதிமன்ற அலுவலர்கள் (நடுத்தீர்ப்பாளர்களின் கீழ் வராதவர்கள்)
15. நிர்வாக நடவடிக்கைகள் பற்றிய நாடாளுமன்ற ஆணையாளர்
16. நாடாளுமன்ற செயலாளர் நாயகமும் அவரின் பணிக்குழுவினரும்
17. அரச சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள்
18. தேர்தல்கள் ஆணையாளர்
19. கணக்காய்வாளர் தலைமையதிபதி
20. 1970.11.18 திகதியன்று தொடக்க ஆண்டுச் சம்பளமாக ஆண்டொன்றிற்கு ரூபா 6700 க்கும் குறையாத பதவியிலுள்ள அரச ஊழியர்கள்
21. 1970.11.18 திகதிக்குப் பின்னர் உருவாக்கப்பட்டதும் அப்பதவி உருவாக்கப்பட்ட திகதியன்று ஏற்புடையதான அளவுத் திட்டத்தின் தொடக்கச் சம்பளத்திற்கு குறையாதிருக்கின்ற ஏதேனும் பதவியிலுள்ள அரச ஊழியர்கள்
22. 1970.11.18 திகதியன்று தொடக்க ஆண்டுச் சம்பளமாக ரூபா 7200 க்கும் குறையாத பதவியிலுள்ள அரச கூட்டுத்தாபன ஊழியர்கள்
23. முப்படையைச் சேரந்த நிலையான உறுப்பினராக இருந்தால்
24. பொலிஸ் உத்தயோகத்தர்கள் அப்பணியை நிறைவேற்றும் அரச ஊழியர்கள் கிராம உத்தியோகத்தர்கள் உட்பட
25. அரச திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனமொன்றில் ஏதேனும் ஒப்பந்தமொன்றுக்குச் சென்றுள்ளவர்கள்
26. வங்குரோத்தானவரென அறிவிக்கப்பட்டிருந்தால்
27. கடந்த ஏழு ஆண்டு காலத்தினுள் நாடாளுமன்ற உறுப்பினராகச் செயற்படுவற்காக காணிக்கை பெற்ற நபரென நீதிமன்றத்தினால் அல்லது விசேட சனாதிபதி ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்ட நபர்கள்
28. உள்ளூராட்சி சபைக்கான உறுப்பினர்களைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் ஏதேனும் சட்டத்தின் பிரகாரம் வாக்களிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளவர்கள்
29. நாடாளுமன்ற உறுப்பினர் பதவி வகிப்பவர்கள்
30. ஒன்றுக்கும் மேற்பட்ட தேர்தல் மாவட்டங்களுக்கு வேட்பு மனுத்தாக்கல் செய்துள்ளவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேட்பு மனுத் தாக்கல்

பாராளுமன்றத்தைக் கலைக்கும் அறிவிப்பிற்கு அல்லது தேர்தல்களை நடத்துமாறு உத்தரவிடும் கட்டளையில் சனாதிபதி, தெரிவத்தாட்சி அலுவலரினால் வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் காலம் அறிவிக்கப்படும். அவ்வறித்தல் வர்த்தமானியில் வெளியான திகதியிலிருந்து பத்து நாட்கள் கழிந்த பின்னரான ஏழு தினங்களுக்குட்பட்ட காலத்தில் வேட்புமனுத்தாக்கல் இடம்பெறும். மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரிடம் வேட்பு மனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியதோடு அது பின்வருமாறு தயாரிக்கப்படல் வேண்டும்.

1. உரிய மாதிரி வடிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டிருத்தல்
2. சம்பந்தப்பட்ட நிர்வாக மாவட்டத்தில், அதாவது தேர்தல் மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை விட மூவரின் பெயர்கள் மேலதிகமாக சேர்க்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. வேட்பாளரின் கையொப்பம்
4. அரசியலமைப்பின் 7 வது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வடிவத்திற்கு அமைய உறுதியுரையில் கையொப்பம் இட வேண்டும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை பாதுகாப்பதாகவும் இலங்கையினுள் தனியானதொரு அரசை தாபிக்க நேரடியாக அல்லது மறைமுகமாக உதவி, ஒத்துழைப்பு வழங்குவதில்லையென உறுதியுரை இதில் அடங்கும்.
5. ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சியின் வேட்பு மனுவில் அதன் செயலாளரும், சுயேட்சைக்குழுவாயின் பெயர்ப்பட்டியலில் முதலாவது பெயர் குறிப்பிடப்பட்டவரும் கையொப்பமிட வேண்டும்.
6. வேட்பு மனுவில் இட்டுள்ள கையொப்பமானது சமாதான நீதவான் அல்லது பிரசித்த நொத்தாரிசுவினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
7. ஒரு வேட்புமனுவையும் அதன் ஒரு பிரதியையும் மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கட்சியின் வேட்புமனுப் பத்திரத்தை அக்கட்சியின் செயலாளர் அல்லது அதிகாரம் பெற்ற முகவரினால் தாக்கல் செய்ய முடியும். ஏதேனும் சந்தர்ப்பத்தில் அதைச் செய்ய முடியாமலிருப்பின் பத்திரத்தில் இரண்டாவதாக குறிப்பிடப்பட்ட நபருக்கு அதைச் செய்ய முடியும்.

வேட்பு மனு நிராகரிக்கப்படுமானால் தெரிவத்தாட்சி அலுவலர் வேட்புமனுவைத் தாக்கல் செய்த நபருக்கு அதை அறிவிக்க வேண்டும்.

தெரிவத்தாட்சி ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுப் பத்திரத்தின் பிரதியொன்றை தன்னுடைய விளம்பரப் பத்திரத்தின் பிரதியொன்றை தன்னுடைய விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்த வேண்டும். தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் ஏதேனும் தவறு அல்லது பிழைகள் இருப்பதாக தாக்கல் செய்த நபர் அறிந்தால், வேட்பு மனு தாக்கல் செய்யும் காலம் முடிவடைவதற்குள் அதை நிவர்த்தி செய்துகொள்வதற்கான கோரிக்கையொன்றை முன்வைக்கலாம். அதன் போது தவறுதலிலான பிழை அல்லது அத்தவறைத் திருத்திக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படலாம். வேட்புமனுவைக் காட்சிப்படுத்திய பின்னர் பின்வரும் எழுத்துக்களின் அடிப்படையில் ஆட்சேபனை தெரிவிக்கலாம். அந்த ஆட்சேபனை எழுத்து மூலமானதாகவும், ஆட்சேபிப்பவரின் கையொப்பத்தைக் கொண்டதாகவும் இருத்தல் வேண்டும்.

1. வேட்பாளரை அடையாளம் காண்பதற்கென அளிக்கப்பட்ட தகவல் போதாமை.
   உதா: பெயர் முழுமை பெறாதிருத்தல் அல்லது சந்தேகத்திற்கிடமாதல்.
2. முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத வேட்புமனுத்தாக்கல் (ஏற்கனவே சொல்லப்பட்டதற்கு அப்பாலான விதத்தில்)
3. வேட்புமனுப்பத்திரத்திலுள்ள தகவல்களின் படி ஓர் உறுப்பினராவதற்கான தகுதியற்றிருத்தல்.
4. சட்ட விரோத அல்லது ஊழல் நடவடிக்கை காரணமாக ஓர் உறுப்பினராக தெரிவாகாதிருப்பதற்கோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்தல் மனுவொன்றுடன் தொடர்புடைய வழக்குத் தீர்ப்பு காரணமாக உறுப்பினராவதற்கான தகுதியை இழத்தல் (அரசியலமைப்பின் 91 பிரிவின் பிரகாரம் சான்றுகளுடன் இதை உறுதிப்படுத்த முடியும்.)

மேற்கூறிய 1,2 மற்றும் 3ம் ஏதுக்கள் தொடர்பான முடிவுகளைத் தெரிவத்தாட்சி அலுவலரினால் எடுக்க முடியும். அதே போன்று 4வது ஏது பற்றி மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். இங்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முடிவு இறுதி முடிவாக இருப்பதோடு ஆட்சேபனை ஏற்றுக்கொள்ளப்பட்டால் சம்மந்தப் பட்ட நபரின் வேட்பாளர் நிலை இல்லாதொழியும். இல. 4 ல் தெரிவிக்கப்பட்டுள்ள ஏதேனும் ஏது காரணமாக அல்லது குடியியல் தகுதியீனத்திற்குட்பட்டுள்ள ஒருவர் தான் தகுதியற்றவரென்ற விடயத்தை அறிந்திருந்தும் வேட்புமனுப் பத்திரமொன்றில் பெயரை உள்ளடக்கினால் அவர் குற்றவாளியாகக் கருதப்படுவார். இத் தவறுக்கு 1000 ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது 3 மாத கால மறியற்றண்டனைக்கு ஆளாகலாம்.

**வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னரான நடவடிக்கை முறை**

ஒரேயொரு வேட்புமனுப்பத்திரம் மட்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட கட்சியின் செயலாளர் அல்லது சுயேட்சைக் குழுவாகின் அதன் தலைவரோடு கலந்துரையாடி உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவார்கள். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் போது அந்தந்த பத்திரத்திற்கு உரிய சின்னங்களை வழங்க வேண்டும். சுயேட்சைக்குழுக்களிலிருப்பின் அவற்றிற்கும் சின்னங்களை ஒதுக்க வேண்டும்.

ஒரு கட்சிக்கென ஒதுக்கப்பட்ட சின்னத்தை/அடையாளத்தை எக்காரணத்திற்காகவும் பிறிதொரு கட்சி அல்லது சுயேட்சைக்குழுவிற்கு பெற்றுக்கொள்ள முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டதன் பின் சம்பந்தப்பட்ட தெரிவத்தாட்சி அலுவலர்கள் ஒவ்வொரு பட்டியலிலும் காணப்படும் வேட்பாளர்களின் பெயர்களை சிங்கள அகர வரிசையின் பிரகாரம் தயாரித்து அவர்களுக்கான தொடர் இலக்கங்கள் வழங்க வேண்டும். சுயேட்சைக்குழுக்களுக்கும் இலக்கங்கள் வழங்கப்பட வேண்டும்.

முழு நோன்மதி தினம் அல்லது அரசாங்க விடுமுறை தினமல்லாத ஒரு தினத்தில் வாக்கெடுப்பை நடாத்த வேண்டியதோடு, அந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஐந்து வாரங்களுக்கு குறையாததும் ஏழு வாரங்களுக்கு மேற்படாததுமான காலத்தின் ஏதாவதொரு தினத்தை வாக்கெடுப்புத் தினமாக அறிவிக்க வேண்டும். அரசாங்க விடுமுறை தினம் அல்லது முழுநோன்மதி தினத்தில் வாக்கெடுப்பை நடாத்தக்கூடாதெனவும் ஏதாவதொரு ஏது காரணமாக அரசாங்க விடுமுறை தினத்தை தேர்தல் தினமாக அறிவித்தால், அத்தினத்தில் இடம்பெறும் வாக்கெடுப்பு செல்லுபடியாகும்.

நிருவாக மாவட்டங்களில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களுக்குமான வாக்குச் சாவடிகளுக்குமான வாக்குச்சாவடிகளின் அமைவு மற்றும் வாக்காளர்களுக்கென விசேட வாக்குச்சாவடிகள் அமைக்கப்படுமானால் அவற்றையும் குறிப்பிட்டு வர்த்தமானியில் அறிவித்தல் ஒன்றை வெளியிட வேண்டும். விசேடமான ஏது காரணமாக வாக்காளர்களுக்கு தனியான வாக்குச்சாவடியொன்று அமைக்கப்படாதவிடத்து ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலும் ஒரு வாக்குச்சாவடி மட்டுமே அமைக்கப்பட வேண்டும். விசேடமான ஓர் ஏதுவினால் தேர்தல் மாவட்டத்திற்கு வெளியே வாக்குச்சாவடிகளை அமைக்கும் அதிகாரம் தெரிவத்தாட்சி அலுவலருக்குண்டு. (உதா: விசேட காரணங்களால் இடம்பெயர்ந்தோருக்கு) வேட்புமனுத்தாக்கல் செய்யப்பட்ட திகதிக்கும் வாக்கெடுப்பு நடத்தப்படும் திகதிக்குமிடையில் வேட்பாளர் ஒருவர் மரணித்தால் அவரின் பெயர் அடங்கிய வேட்பாளர் பெயர்ப்பட்டியல் செல்லுபடியற்றதாகவோ அல்லது பதிய வேட்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனுப்பத்திரத்தை ஏற்றுக்கொள்ளவோ அவசியம் இல்லை. ஏனென்றால் வேட்பு மனுவில் மூன்று நபர்களின் பெயர்கள் மேலதிகமாக சேர்க்கப்பட்டுள்ளன.

தவிர்க்கமுடியாத காரணத்தினால் ஏதாவதொரு நிருவாக மாவட்டத்திற்கான வாக்கெடுப்பை உரிய தினத்தில் நடாத்த முடியாது போனால் வர்த்தமானியில் வெளியிடும் அறிவித்தல் ஒன்றின் மூலம் அம்மாவட்டத்திற்கான பிறிதொரு வாக்கெடுப்பு திகதியை அறிவிக்கவேண்டும். அத்தினமானது வர்த்தமானியில் வெளியிடப்படும் திகதியில் இருந்து இரு வாரங்களுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். தெரிவத்தாட்சி அலுவலர் ஒவ்வொரு வாக்காளருக்குமான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை வாக்கெடுப்பு தினத்திற்கு ஆகக்குறைந்தது 14 தினங்களுக்கு முன் கிடைக்கக் கூடியதாக தபால் மூலம் அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். அதில் பின்வரும் தகவல்கள் அடங்கியிருத்தல் வேண்டும்.

1. நிருவாக மாவட்டம்
2. வாக்காளரின் பெயர், முகவரி, பதிவிலக்கம் ( வாக்காளர் இடாப்பு இல.)
3. தேர்தல் மாவட்டமும், உரிய வாக்குச்சாவடியும்
4. வாக்கெடுப்புத் திகதியும் நேரமும்

**வாக்கெடுப்புதின நடவடிக்கை முறை**

## 1. பூர்வாங்க நடவடிக்கைகள்

சிரேஷ்ட தலைமைதாங்கும் அலுவலர் வாக்குச் சீட்டுக்கள், உத்தியோகபூர்வ இலட்சினை, அலுவலக முறையான அடையாளம் மற்றும் வாக்காளர் இடாப்புக்களின் பிரதிகளை வாக்குச் சாவடி முகவர்களுக்கு காண்பிக்கவேண்டும். வாக்கு பெட்டிகள் வெற்றுப் பெட்டிகளாக இருப்பதைக்காட்ட வேண்டும். புதிய வாக்குப் பெட்டியொன்றை பயன்பாட்டிற்கு எடுக்கும் எல்லா நேரத்திலும் இவ்வாறு செய்ய வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்குச் சாவடிகளில் பின்வரும் வசதிகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

- ✓ வாக்காளர் இடாப்பு.
- ✓ தபால் மூல வாக்காளர்களின் நிரல்.
- ✓ வாக்காளர் வாக்குச் சீட்டில் குறியீட்டை மேற்கொள்ளத் தேவையான சூழலும் உபகரணமும் (மூன்று பக்கங்களாலும் மறைக்கப்பட்ட இடமும், போதிய வெளிச்சமும்.)
- ✓ பாதுகாப்பு ஏற்பாடுகள் தேர்தல் சட்டத்தின் கீழ்வரும் இதர வசதிகள் வாக்கெடுப்பு ஆரம்பமாவதற்கு முன் கீழுள்ள அறிவித்தலை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வாக்காளரின் வசதிகருதி பார்வைக்கு வைக்க தேர்தல் அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
  - ➢ வேடபாளர்களின் பெயர்கள், அவர்களின் கட்சிக்கு/குழுவிற்கு உரிய சின்னங்கள் மற்றும் இலக்கங்கள்.
  - ➢ வாக்காளருக்கு வழிகாட்டும் அறிவுரைகளும் மாதிரி வாக்குச் சீட்டும்.

## 2. வாக்கெடுப்பை ஆரம்பித்தல்

தேர்தல் தினத்தன்று மு.ப 7.00 மணிக்கு வாக்கெடுப்பை ஆரம்பிக்க வேண்டும். முதலாவதாக வாக்காளர்களின் அடையாளம் உறுதி செய்யப்பட வேண்டும். 2004 ஆண்டு 14 ஆம் இலக்க நாடாளுமன்றச் சட்டம் மற்றும் தேர்தல்கள் ஆணையாளரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆட்பதிவு திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டையைக் காண்பித்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக பின்வரும் ஆவணங்களை சட்டரீதியாக பயன்படுத்த முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ உதவி தேர்தல்கள் ஆணையாளரின் அனுமதியின் பேரில் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை
- ✓ முதியோர் அடையாள அட்டை
- ✓ ஓய்வூதியக்காரர்களின் அடையாள அட்டை
- ✓ மதகுருமாரின் அடையாள அட்டை
- ✓ வாகன உரிமைப் பத்திரம்

வாக்காளரின் இலக்கமும் பெயரும், உரத்துக் கூப்பிடப்படுதல் வேண்டும். இலக்கம் அடியிதழ் தாளில் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச் சீட்டு கிழிக்கப்படடல் வேண்டும். அலுவலக முறையான அடையாளம் அதில் பொறிக்கப்படவேண்டும். இல்லாவிடின் துளையிட வேண்டும். வாக்காளர் இடாப்பில் வாக்குச் சீட்டு வழங்கப்பட்டதற்கான அடையாளத்தை இட வேண்டும். அவ்வடையாளத்தின் மூலம் குறித்த நபருக்கு வழங்கிய வாக்குச் சீட்டை அறிந்து கொள்ள இடமளிக்கப்படலாகாது. வாக்காளரின் இடது கை சிறு விரலில் தோதான குறியீட்டை (மை தீட்டல்) இடவேண்டும். சிறு விரல் இல்லாவிட்டால் இடது கையின் வேறு ஒரு விரலிலும், இடக்கையில் விரல்கள் இல்லாவிட்டால் கையின் நுனியிலும் தோதான குறியீட்டை இட வேண்டும். வாக்காளர் அதை எதிர்க்க முடியாது. தோதான குறியீடு இல்லாத வாக்காளர்கள் வாக்குச் சீட்டை வழங்கக் கூடாது. ஒரு வாக்காளர் வாக்களிப்பு முறை பற்றிக் கேட்டால், அவருக்கு அது குறித்து விளக்கமளிக்க வேண்டும். தலைமைதாங்கும் அலுவலர் அல்லது அவரின் உதவியாளர், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் செவிமடுக்கக் கூடிய விதத்தில் விளக்கமளிப்பைச் செய்ய வேண்டும். வலது குறைந்தோர் மற்றும் விழிப்புலன் அற்றோரின் வாக்குகள் அவர்களின் விருப்பத்திற்கு இணங்க வேறொரு உத்தியோகத்தரின் முன்னிலையில் பதியப்படுதல் வேண்டும். மேற்கூறிய சந்தர்ப்பங்களில் வாக்கெடுப்பு நிலைய முகவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழிப்புடன் இருக்க வேண்டும். குறித்த செயற்பாடுகள் உரிய முறையில் நிறைவேற்றப் படாத பட்சத்தில் தலைமைதாங்கும் அலுவலருக்கு முறைப்பாடு செய்து தன்னிடமும் அது பற்றிய குறிப்பொன்றை வைத்துக்கொள்ள முகவர்களுக்கு முடியும்.

வாக்காளரின் பெயர் வாக்காளர் இடாப்பில் காணப்படுமாயின் அவருக்கு வாக்குச்சீட்டு ஒன்றைப் பெறுவதற்கும் கோருவதற்குமான முழுமையான உரிமை உண்டு. தலைமை தாங்கும் அலுவலர் பின்வரும் ஏதுக்களினால் மட்டும் வாக்குச்சீட்டை வழங்காதிருக்க முடியும்.

- ✓ ஆளடையாளத்தை உறுதிப்படுத்தாமை.
- ✓ ஒரு வாக்காளரின் சிறு விரலை சோதனையிட்டு அதில் துடைத்தழிக்க முடியாதவாறு தோதான குறியீடு உள்ளதாவென்பதை ஆராய தலைமை தாங்கும் அலுவலருக்கு அல்லது அவருடைய உதவியாளருக்கு இடமளிக்காதிருத்தல்.
- ✓ அவ்வாறான சோதனையின் மூலம் தோதான குறியீடு உள்ளதென்பதை கண்டறிதல்.
- ✓ சிறு விரலில் தோதான குறியீட்டை இட இடமளிக்காதிருத்தல்.

ஒரு வாக்காளர் தனக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டை தவறாக பயன்படுத்தியிருந்தால் அதை தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்து அதற்குப் பதிலாக இன்னொரு வாக்குச்சீட்டை பெற முடியும், வாக்காளர் வாக்குச்சீட்டை கோரும் போது அவரின் பெயரிலான வாக்குச்சீட்டு வேறொருவருக்கு வழங்கப்பட்டிருந்தால், கூற்றொன்றின் மூலம் அதைத் தெரிவித்து இரண்டாம் வாக்குச்சீட்டைக் கேட்டுப் பெற முடியும். அவ்வாறு பெறும் வாக்குச்சீட்டுக்கள் விசேடமான சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் எண்ணப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 3. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்

வாக்கெடுப்பு தினத்தில் முகவர் நியமனத்திற்கான கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். அக்கடிதமானது,

- ✓ ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சியின் செயலாளர் அவரின் அதிகாரம் பெற்ற பிரதிநிதி சுயேட்சைக் குழுவாயின் அதன் தலைவரிடமிருந்து பெறப்பட வேண்டும்.
- ✓ அந்நியமனக் கடிதத்தில் முகவரின் பெயர், விலாசம், தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன குறிப்பிடப் பட வேண்டும். குறித்த அடையாள அட்டையைக் கொண்டு செல்ல வேண்டும்.
- ✓ நியமனக் கடிதத்தை வழங்கவுள்ள அதிகாரம் பெற்ற நபர் பற்றி வாக்கெடுப்பு தினத்திற்கு 07 தினங்களுக்கு முன்னர் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அறிவித்திருக்க வேண்டும்.
- ✓ வாக்குச்சாவடி முகவரின் நியமனக் கடிதத்தை இரத்துச் செய்து புதிய முகவரை நியமிப்பதற்கான மேற்படி தகவல்களுடன் எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும்.
- ✓ வாக்கெடுப்பு நிலையமொன்றில் ஒரு கட்சி அல்லது குழு சார்பில் இரண்டிற்கும் மேற்பட்ட முகவர்கள் தங்கியிருத்தல் கூடாது.
- ✓ வாக்கெடுப்பு நிலையத்தின் சீரான போக்கைப் பேண தலைமை தாங்கும் அலுவலருக்கு ஒத்துழைக்க வேண்டும். அங்கு தங்கியிருக்கும் அதிகாரம் பெற்றவர்கள் தவிர்ந்த ஏனையவர்களை வெளியேற்ற முடியும். அதனால் அவ்வாறானவர்கள் உள் வரும் போது அதைச் செய்யுமாறு நினைவூட்ட முடியும்.

### 5. வாக்கெடுப்புப் பணிகளில் ஈடுபடும் அலுவலர்கள் மற்றும் முகவர்களின் கடமைகளும் பொறுப்புக்களும்.

வாக்கெடுப்பு நிலையத்தில் அல்லது எண்ணும் நிலையத்தில் கடமையில் ஈடுபடும் அலுவலர்கள், முகவர்கள், அவ்விடத்திற்குச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்ல அதிகாரம் பெற்றுள்ளவர்கள், எழுதுநர்கள், வேட்பாளர்கள் மற்றும் முகவர்கள் இரகசியம் பேணுவதற்கான நியதிச் சட்ட முறையான வெளிப்படுத்துகையொன்றில் கையொப்பமிட வேண்டும். மேலும்,

- ✓ இரகசியத் தன்மையைப் பேணுதல், பேண உதவுதல்.
- ✓ வாக்காளரின் பெயர், இலக்கம் அல்லது அலுவலக முறையான குறியீடு தொடர்பில் சட்டத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கு முரணான வகையில் எவருக்கும் அறிவித்தல் கூடாது.
- ✓ வாக்களிக்கும், அளித்த கட்சி அல்லது குழு அல்லது வாக்குச்சீட்டின் பின்பக்க இலக்கத்தை அறிவித்தல் கூடாது.
- ✓ வாக்கு எண்ணும் போது வாக்குச்சீட்டுடன் தொடர்புடைய இலக்கத்தை உறுதிப்பட அறிதல் கூடாது.

வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்களிக்க முன்னர் வாக்காளருடன் கதைத்தலாகாது. இத்தவறுக்கான குற்றவாளியாவதன் மூலம் ரூபா 500 குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத கால மறியற்றண்டனைக்கு ஆளாகலாம். அத்தோடு 7 ஆண்டுகளுக்கு குடியியல் தகுதி இல்லாதொழிக்கப்படும்.

பின்வருவோருக்கு மட்டுமே வாக்கெடுப்பு நிலையத்திற்குள் செல்ல முடியும்.

1) வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் மட்டும்
2) வாக்கெடுப்பு நிலையத்தின் பணியாளர்கள்
3) அங்கு கடமைக்கென அமர்த்தப்பட்ட பொலிஸார்
4) களப்பணி நிமித்தம் வரும் தெரிவத்தாட்சி அலுவலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) அடையாள அட்டை மற்றும் நியமனக்கடிதங்கள் சகிதம் வரும் வாக்கெடுப்பு நிலைய முகவர்
6) வேட்பாளர்கள் (ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவருக்கு மட்டுமே வாக்கெடுப்பு நிலையத்தினுள் இருக்க முடியும்)
7) போட்டியிடும் அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் சுயேட்சைக் குழுத் தலைவர்கள்
8) ஏற்றுக் கொள்ளப்பட்ட கண்காணிப்பாளர்கள் மேலே சொல்லப்படாத ஏனையோர் பிரவேசித்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

## 05. வாக்கெடுப்பை முடிவுறுத்தல்

மு.ப 7.00 மணிக்கு ஆரம்பித்த வாக்கெடுப்பை பி.ப 4.00 மணிக்கு நிறைவு செய்ய வேண்டும். அதாவது வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படுவதை நிறுத்த வேண்டும். வாக்கெடுப்பு முடிவுற்றதை உடனடுத்து தலைமை தாங்கும் அலுவலர் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்களின் முன்னிலையில் தனது இலச்சினையும் வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்கள் விரும்பினால் அவர்களது இலச்சினைகளையும் பயன்படுத்தி பின்வரும் ஆவணங்களில் பொறிக்க வேண்டும்.

- ✓ பயன்படுத்தாத மற்றும் பழுதுபட்ட வாக்குச்சீட்டுக்களைக் கொண்ட பொதியில்
- ✓ குறியீடு செய்யப்பட்ட வாக்காளர் இடாப்பு பிரதிகளிலும் வாக்குச் சீட்டுக்களின் அடியிதழ்களும்
- ✓ கேட்டுப் பெறும் வாக்குகளின் நிரல்
- ✓ வாக்குச்சீட்டுக்கள் வழங்கப்படாத வாக்காளரின் இடாப்பு

தலைமை தாங்கும் அலுவலரினால் திறக்கப்படாத வாக்குப் பெட்டிகளுக்கு தங்களின் இலச்சினையைப் பொறிக்க விரும்பும் வேட்பாளர்கள் அல்லது அவர்களது வாக்கெடுப்பு நிலைய முகவர்களின் இலச்சினையைப் பொறித்து சிறந்த முறையில் பூட்டி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு அனுப்ப வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது வாக்கு எண்ணும் நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும். வாக்கெடுப்பு நிலைய தலைமை தாங்கும் அலுவலரினால் மேற்சொல்லப்பட்ட பொதிகள் மற்றும் வாக்குப் பெட்டிகளை அல்லது பெட்டிகளை அவருக்கு உதவி புரியும் தலைமை தாங்கும் அலுவலரிடம் ஒப்படைத்தல், பெற்ற அலுவலருக்கு ஒப்படைத்த வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கையும் கீழுள்ள கூற்றுக்களையும் தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலருக்கு வழங்க வேண்டும்.

- ✓ பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்கள் தவிர்ந்த வாக்காளர்களுக்கு வழங்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்
- ✓ பழுதுபட்ட வாக்குச் சீட்டுக்கள்
- ✓ பயன்படுத்தப்படாத வாக்குச் சீட்டுக்கள்

**6. வாக்கெடுப்பு நிலையமொன்றில் வாக்கெடுப்பைச் சூனியமாக்கப் பயனுறக்கூடிய விடயங்கள்**

1. மு.ப 7.00 மணிக்கு வாக்குச்சாவடி திறக்கப்படாமை.
2. பி.ப 4.00 மணிக்கு வாக்கெடுப்பை முடிவுறுத்தாமை.
3. எல்லா வாக்குப்பெட்டிகளையும் வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து வாக்கு எண்ணும் அலுவலருக்கு கையளிக்கும் நோக்கத்துடன் கொண்டு செல்வதை தாமதித்தல்.
4. சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலருக்கு கட்டுப்படுத்த முடியாத ஏதேனுமொரு ஏதுவினால் வாக்கெடுப்பை நடத்திச் செல்ல முடியாமை.
5. வாக்கெடுப்பு நேரத்தினுள் வாக்கெடுப்பு நிலையமொன்றின் முகவரை/முகவர்களை அச்சுறுத்தல் தாக்குதல் அல்லது விரட்டியடித்தல்.
6. வாக்கெடுப்பை நடத்தி செல்ல முடியாதவாறு அமைதியைச் சீர்குலைத்தல்.

பின்வரும் அலுவலர்கள் அல்லது நபர்களினால் சமர்ப்பிக்கப்படும் அறிக்கை அல்லது அறிக்கைகளின் அடிப்படையில் தேர்தல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையாளர் இது குறித்த தீர்மானத்தை அறிவிக்கும் வர்த்தமானியை வெளியிடுவார். வாக்கெடுப்பு நடாத்தப்படும்.

- சிரேஷ்ட தேர்தல் தலைமை தாங்கும் அலுவலர்.
- தெரிவத்தாட்சி அலுவலர் - மேலதிக தெரிவத்தாட்சி அலுவலர்.
- வாக்கெடுப்பு நிலைய முகவர்கள்.
- கடமையில்/சேவையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்கள்.
- சுயாதீன தேர்தல் கண்காணிப்பாளர்கள்.

## 7. வாக்கு எண்ணுதல்

சம்பந்தப்பட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் தேர்தல் மாவட்டத்திலுள்ள வாக்குப்பெட்டிகள் அனைத்தும் கிடைத்த பின்னர் முடிந்தளவு விரைவாக எண்ணும் பணிகளை ஆரம்பிக்க வேண்டும். வாக்கு எண்ணும் நேரம் மற்றும் இடத்தை வேட்பாளர்களுக்கும் முகவர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

எண்ணும் முகவரின் முன்னிலையில் ஒவ்வொரு பெட்டியிலுமுள்ள வாக்குகளை எண்ணிய பின்னர் குறிப்பீடு செய்து அனைத்து வாக்குச் சீட்டுக்களையும் சேர்த்துக் கலத்தல் வேண்டும். எண்ணும் போது வாக்குச்சீட்டின் முன்பக்கம் மேல் நோக்கி இருக்கும் படி வைக்க வேண்டும். அதன் இலக்கம் தென்படக்கூடியவாறு வைத்தல் வேண்டும். வாக்கு எண்ணுதலை தொடர்ச்சியாக செய்ய வேண்டும். நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களில் "நிராகரிக்கப்பட்டுள்ளது" என புறக்குறிப்பிடுதல் வேண்டும். எண்ணும் போது சம்பந்தப்பட்ட அலுவலர்களும் முகவர்களும் மட்டுமே அங்கு தங்கியிருக்க முடியும். இங்கு எண்ணும் முகவர்கள் வாக்குப்பெட்டிகள் உரிய முறையில் இருக்கின்றதாவென்பதையும் ஏனைய கருமங்கள் உரிய முறையில் இடம் பெறுகிறதாவென்பதையும் அவதானித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறல்லாதவிடத்து வாக்கெடுப்பு நிலையத்தின் தலைமை தாங்கும் அலுவலருக்கு முறைப்பாடு செய்ய வேண்டும்.

வாக்குச்சீட்டுக்களை பொதியிடும் போது உரிய சீட்டுக்கள் மாத்திரம் சேர்க்கப்படுகிறதா, 50 மற்றும் 500 ஆக பொதிகள் செய்யப்படுகின்றனவா என்பதை முகவர் சோதனையிட வேண்டும். வாக்குச்சீட்டொன்றில் இலச்சினை அல்லது துளையிட்டிருக்காத நிலையில் அது நிராகரிக்கப்படுவதில்லை. முகவர்களிடமும் அது குறித்து கருத்து கேட்கப்படும். உரிய முறையில் கருத்துக்கூற வேண்டும். வாக்குச்சீட்டொன்று நிராகரிக்கப்பட முன் அதை முகவரிடம் காட்டி கருத்து கேட்கப்படும். நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்களின் எண்ணிக்கையை தனித்தனியாகக காட்டும் “வாக்குச்சீட்டுக் கணக்கு” தயாரிக்கப்படும். தேவையாயின் முகவர்களுக்கு அவற்றின் பிரதிகளைப் பெற முடியும்.

ஒவ்வொரு கட்சிக்கும் குழுக்களுக்கும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை பற்றி எழுத்தாலான கூற்றொன்று தயாரிக்கப்படும். முகவர்களும் அதில் கையொப்பமிட முடியும். பிரதியெடுக்க முடியும் எண்ணும் முகவரொருவருக்கு மீள எண்ணப்படுவதற்கான கோரிக்கையொன்றை முன் வைக்க முடியும். ஆகக் கூடியது 2 தடவைகளில் வாக்குச்சீட்டொன்று பற்றி எழும் பிரச்சினைக்கான இறுதி முடிவு எண்ணும் அலுவலரைச் சார்ந்ததாகும்.

எண்ணும் போது நிராகரிக்க வேண்டிய வாக்குச்சீட்டுக்கள் சில காணப்படுகின்றன. அவையாவன,

1. அலுவலக முறையான அடையாளம் இல்லாத வாக்குச்சீட்டு
2. ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றுக்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுக்கள்
3. ஒன்றுக்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்களுக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சி மற்றும் ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட சுயேட்சைக் குழுக்களுக்கு வாக்களித்துள்ள வாக்குச்சீட்டுக்கள்
5. பின்பக்கத்தில் அச்சிடப்பட்ட இலக்கம் தவிர்ந்த வாக்காளரை அடையாளம் காணக்கூடிய ஏதேனும் எழுதப்பட்ட அல்லது குறியீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டு
6. குறியீடு செய்யப்படாத வாக்குச்சீட்டு
7. வாக்களித்துள்ள ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக் குழுக்கள் தொடர்பிலான நிச்சயமற்ற தன்மை காரணமாக நிராகரிக்கப்பட்ட வாக்குச்சீட்டுக்கள்

## 8. வாக்கு எண்ணும் நிலைய முகவர்கள்

கட்சியின் செயலாளர், அதிகாரம் பெற்ற பிரதிநிதி அல்லது குழுத்தலைவரினால் வாக்கு எண்ணும் நிலைய முகவர்கள் நியமிக்கப்படுதல் வேண்டும்.

- ஒரு நிலையத்தில் ஐந்திற்கும் மேற்பட்ட எண்ணும் நிலையங்கள் இருப்பின் ஐந்து பேரையும்
- வாக்கு எண்ணும் ஒரு நிலையம் மாத்திரம் இருப்பின் இரண்டு பேரையும் நியமிக்க முடியும்

வாக்கு எண்ணும் முகவர்களின் பெயர்களையும் முகவரிகளையும் வாக்கு எண்ணும் அலுவலருக்கு நேர காலத்தோடு அறிவித்திருக்க வேண்டும். வாக்கு எண்ணும் நிலையத்திற்கு தேசிய அடையாள அட்டையுடன் நியமனக் கடிதத்தையும் எடுத்துச்செல்ல வேண்டும். இவ் ஆவணங்கள் இல்லாதவிடத்து உட் செல்ல அனுமதி வழங்காதிருக்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 9. வாக்களிப்பதற்கான லீவு

பணியாளரொருவர் வாக்களிக்கும் பொருட்டு லீவு கோருமிடத்து அவருக்கு 4 மணித்தியாலங்களுக்குக் குறையாத ஊதியத்துடனான லீவினை வழங்க அனைத்து தொழில் தருநர்களும் கடப்பாடுடையவர்கள்.

## 02. தேர்தல் தவறுகள்

1981 ஆம் ஆண்டு 1 ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய தவறுகள் மூவகைப்படும்.

- தேர்தல் தவறுகள் (66 – 76 ஆம் பிரிவுகள்)
- ஊழல்கள் (77 – 82 ஆம் பிரிவுகள்)
- சட்ட விரோத நடவடிக்கைகள் (83 – 90 ஆம் பிரிவுகள்)

### தேர்தல் தவறுகள்

### 1. தேர்தலுக்கு முன் தடைசெய்யப்பட்ட செயல்கள்

### 66 வது பிரிவு

- வாக்குச் சீட்டின் அலுவலக முறையான குறியீட்டை போலியாகப் புனைதல், போலி வாக்குச் சீட்டு தயாரிப்பு, அவற்றை மோசடியாக உருவழித்தல், அழித்து விடல்.

- முறையான அதிகாரமின்றி வாக்குச் சீட்டை வழங்குதல், விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல்,அலுவலக முறையான குறியீட்டினால் குறிப்பீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை தம் வசம் வைத்திருத்தல், வாக்குச்சாவடிக்கு வெளியே கொண்டு செல்லுதல்.

- குறிப்பீடு செய்யப்பட்ட வாக்குச்சீட்டை வாக்குச்சாவடியில் காட்சிப்படுத்தல். வாக்குச்சீட்டு தவிர்ந்த வேறு எதையேனும் வாக்குப்பெட்டியினுள் இடல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முறையான அதிகாரமின்றி வாக்குப் பெட்டியொன்றை, வாக்குச்சீட்டு பைக்கற்று ஒன்றை தம் வசம் வைத்திருத்தல், அழித்தல், உருவழித்தல்.

- போலியான வாக்குச் சீட்டுக்கள் இடப்பட்ட பின்னர் குடைந்து எடுக்கக் கூடிய, அதைப் பாதிக்கக் கூடிய ஏதேனும் உபகரணத்தை கருவியை அல்லது பொறி உபாயத்தை பயன்படுத்தல் அல்லது குடியரசு இறக்குமதி செய்யும் கருவிகளை கையாளுதல்.

தபால் மூல வாக்கெடுப்பின் போது அடையாளம் தொடர்பில் பொய்யான அறிவிப்பை வெளியிடுதல், தபால் வாக்குச்சீட்டு உறையை முறையான அதிகாரமின்றி திறத்தல், அதற்கு எதையாவது சேர்த்தல்.

உத்தியோக பூர்வ வாக்காளர் அட்டைகளை அச்சிடுதல், தேர்தல் குறியீடு அல்லது தவறாக அக்குறியீடாகக் கருதக் கூடிய எதையாவது இடல்.

மேற்படி தவறுகளுக்கு மேல்நீதிமன்றத்தின் முன்னராக குற்றந் தீர்ப்பளிக்கப் பட்டால் ஈராண்டு கடுழிய மறியற்றண்டனைக்கு ஆளாகலாம். மேலும் நான்கு வருடங்களுக்கு குடியியல் தகுதி இல்லாதொழிக்கப்படலாம். சம்பந்தப்பட்ட தவறாளி ஓர் உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் அவரின் உறுப்பினர் பதவி இல்லாதொழிக்கப்படும்.

**2. வாக்கெடுப்புத் தினத்தன்று தடை செய்யப்பட்ட செயல்கள்**

**68 ஆம் பிரிவு**

வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து அரைக் கிலோ மீற்றர் தூர எல்லைக்குள் பின்வரும் செயல்களைச் செய்தல் தவறாகும்.

- வாக்களிக்குமாறு இரந்து கேட்டல், பரிந்து கேட்டல், அரசியல் கட்சிக்கு, அல்லது சுயேட்சைக் குழுவுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாக்களிக்க வேண்டாமென வாக்காளர்களை வசப்படுத்தல்.

- வாக்கெடுப்புடன் தொடர்புடைய துண்டுப்பிரசுரம், ஒட்டு விளம்பரம், அறிவித்தல், சித்திரம். வேட்பாளரின் புகைப்படம் அல்லது அரசியல் கட்சிக்கு, சுயேட்சைக் குழுவுக்கு குறித்தொதுக்கப்பட்ட சின்னமொன்றை வழங்குதல் அல்லது காட்சிக்கு வைத்திருத்தல்.
- வாக்கெடுப்பு நிலையத்திற்கு வருகை தருவோருக்கு கடமையாற்றும் அலுவலர்களுக்கு அல்லது ஏனையோரின் கடமைகளுக்கு தடையேற்படும் விதத்தில் வாக்களிப்பு நிலையத்திற்கருகில் அல்லது ஏனையோரின் கடமைகளுக்கு தடையேற்படும் விதத்தில் வாக்கெடுப்பு நிலையத்திற்கருகில் அல்லது அதனுள் ஒலிபெருக்கி உபகரணங்களை பயன்படுத்தல், கூச்சல் இடுதல், ஒழுங்கீனமாக நடந்துகொள்ளுதல்.

மேற்படி தவறுகளுக்காக நீதிவான் நீதிமன்றத்தில் சுருக்க முறை விசாரணையின் பின்னர் குற்றந் தீர்ப்பளிக்கப்பட்டால் 100 ரூபா குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத கால மறியற்றண்டனைக்கு ஆளாகலாம்.

### 3. ஊர்வலங்கள் மற்றும் பொதுக் கூட்டங்கள்

**69 வது பிரிவு**

வேட்பு மனுத் தாக்கல் தினத்திலிருந்து முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டு ஒரு வாரம் முடியும் வரை ஊர்வலமொன்றை நடத்திச் செல்லல், ஏற்படுத்தல் அல்லது பங்குபற்றல் தடையாகும். தேர்தலுக்கு பக்கச்சார்பற்ற விதத்திலான மேதின ஊர்வலங்கள் மற்றும் சமய சமூக நோக்கங்களுக்காக மட்டும் நடாத்த முடியும். இவ்வாறானவொன்றுக்கு குற்றந் தீர்ப்பளிக்கப் பட்டால் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத கால மறியற்றண்டனைக்கு அல்லது இவ்விரு தண்டனைகளுக்கும் ஆளாகலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 70 வது பிரிவு

தேர்தலுக்கு இரு தினங்களுக்கு முன்னர் (48 மணித்தியாலங்கள்) தொடங்கி முடிவுகள் வெளிப்படுத்தப்பட்டு ஒரு வாரம் ஆகும் வரை பொதுக்கூட்டங்கள் நடத்தப்படலாகாது. இவ்வாறானவொன்றுக்கு குற்றந்தீர்ப்பளிக்கையில் நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஒரு மாத கால மறியற்றண்டனைக்கு அல்லது இவ்விரு தண்டனைக்கும் ஆளாகலாம்.

### 71 வது பிரிவு

மேற்படி தவறுகளைச் செய்ய எத்தனிக்கும் ஆளொருவர் அதற்கென விதந்துரைக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாவார். இத் தவறுகளுக்கு சந்தேகத்தின் பேரில் பிடியாணை இன்றி கைது செய்ய முடியும். எனினும் 66, 67, 68, 69, 70 ஆகிய பிரிவுகளின் கீழான தேர்தல் தவறொன்றிற்கான குற்ற வழக்கை சட்டமா அதிபரின் அனுமதியின்றி தொடர முடியாது. அண்மைக் காலத்தில் சட்டமா அதிபரினால் இது போன்ற பல சம்பவங்களுக்கு வழக்குத் தொடர அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## 5. பிரசார விளம்பரங்களும் அலுவலங்கள் நடத்திச் செல்லலும்

### 72 வது பிரிவு

தேர்தலொன்றைக் குறிப்பீடு செய்யும் பிரசார விளம்பரம் துண்டுப்பிரசுரம், ஓட்டு விளம்பரத்தில் அதன் வெளியீட்டாளரினதும் அச்சிடுபவரினதும் பெயர் மற்றும் முகவரி இல்லாவிட்டால் அதை வழங்குதலும் ஒட்டுதலும் வேட்பாளரல்லாத வேறெவராலும் செய்ய முடியாது. இது போன்ற தவறொன்று நல்ல நோக்கத்துடன் தற்செயலாக நடந்திருப்பின் அதை உறுதிப்படுத்துவதன் மூலம் அதிலிருந்து விடுபடலாம். நீதவானொருவர் இத்தவறைச் செய்யும் நபருக்கு ரூபா 500 ஐ குற்றப்பணமாக விதிக்கலாம்.

### 73 வது பிரிவு

வேட்பு மனுக் கால எல்லையின் முதலாவது தினத்திலிருந்து வாக்கெடுப்புத்தினத்திற்கு முந்திய தினம் வரை கீழுள்ளவாறு தேர்தல் அலுவலகங்களை நடத்திச் செல்ல முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ அதிகாரம் பெற்ற முகவரொருவருக்கு ஏதேனும் தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேர்தல் அலுவலகத்தையும் ஒவ்வொரு தேர்தல் தொகுதியிலும் ஒரு கிளை அலுவலகத்தையும் நடத்திச் செல்ல முடியும். (73- 1(அ) பிரிவு)
- ✓ ஒவ்வொரு வேட்பாளர் சார்பிலும் ஒரு கிளை அலுவலகம். (73- 1(அ) பிரிவு)
- ✓ குழுத்தலைவரின் அல்லது வேட்பாளரின் பொதுவான வதிவிடத்தை தேர்தல் அலுவலகமாக நடத்திச் செல்லலாம். (73- 2(அ) பிரிவு) இக்கிளை அலுவலகத்தை அமைப்பதாக பிரதேசத்திற்கு பொறுப்பான பொலிஸ் உத்தியோகத்தருக்கும், அலுவலகம் அமைந்துள்ள தேர்தல் மாவட்டத்தின் தெரிவத்தாட்சி அலுவலர்களுக்கும் அறிவித்தல் வேண்டும். (73- 6(அ) பிரிவு) இப்பிரிவுகளின் கீழான தவறொன்றுக்கு வழக்குத் தொடர சட்டமா அதிபரின் அனுமதி தேவை.

நீதவான் நீதி மன்றத்தின் குற்றம் தீர்ப்பளிக்கப்பட்டால் நூறு ரூபா குற்றப் பணம் அல்லது ஒரு மாதகால மறியல் தண்டனை அல்லது இவ்விரு தண்டனைகளுக்கும் ஆளாகலாம்.

## 05. தேர்தல் சின்னத்தை காட்சிப்படுத்தல்

### 74 வது பிரிவு

துண்டுப்பிரசுரங்கள், விளம்பரத்தாள்களை வேட்புமனுத் தினத்திலிருந்து வாக்கெடுப்புத் தினத்திற்கு அடுத்துள்ள தினம் வரை வாக்கெடுப்பிற்காக வசப்படுத்தும் நோக்கில் வேட்பாளரின் வாகனம் தவிர்ந்த வேறு வாகனங்களில் கொடி பதாதைகள், விளம்பரங்கள், புகைப்படங்கள் மற்றும் அடையாளத்தை காட்சிப்படுத்தலாகாது. பெருந்தெரு ஒன்றில் அவ்வாறு காட்சிப்டுத்தல் தவறாகும்.

வேட்பாளர் ஒருவருக்கு ஆதரவு திரட்டும் கூட்டமொன்று நடைபெறும் இடம் தவிர்ந்த,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ மக்கள் நடமாட்டத்திற்கு சுதந்திரம் அல்லது வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள இடத்தில் ஏதேனும் துண்டுப் பிரசுரம், ஒட்டு விளம்பரம், அறிவித்தல், சித்திரம், வேட்பாளரின் புகைப்படம், அடையாளம் அல்லது சின்னத்தை காட்சிப்படுத்தலாகாது.
- ✓ வீதியொன்றுக்கு குறுக்காக அல்லது பெருந்தெருவில் துண்டுப்பிரசுரம், ஒட்டு விளம்பரம், அறிவித்தல் சித்திரம், வேட்பாளரின் புகைப்படம், அடையாளம், சின்னம், கொடி அல்லது பதாதையை காட்சிப்படுத்தலாகாது.
- ✓ ஏதேனும் பொது அல்லது தனிப்பட்ட இடமொன்றில் கொடி, பதாதைகளை காட்சிப்படுத்தலாகாது.

நீதவான் நீதிமன்றத்தில் இத்தவறுகளுக்காக குற்றம் தீர்ப்பளிக்கப்பட்டால் நூறு ரூபாய் குற்றப் பணத்திற்கும் ஒரு மாத கால மறியற் தண்டனைக்கும் ஆளாகலாம். இத்தவறுகள் அல்லது தவறுகளுக்கு எத்தனித்தல் தொடர்பாக பிடியாணை இன்றி கைது செய்ய முடியும். இவற்றைத் தடுப்பதற்கு பொலிஸாருக்கு அதிகாரத்தை பிரயோகிக்க முடியும். நீதவான் நீதிமன்றத்தில் தடுப்பதற்கான வேண்டுகோளை விடுக்க முடியும். அவ்வாறான சட்ட விரோத ஒட்டு விளம்பரங்கள், பதாதைகள் மற்றும் விளம்பரங்களை அகற்ற பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது.

**06. இரந்து வாக்குக் கேட்டல்.**

**75வது பிரிவு**

வேட்பு மனுத்தாக்கலின் இறுதித்தினத்திலிருந்து வாக்கெடுப்புத் தினத்திற்கு அடுத்துள்ள தினம் வரை வேட்பாளர் ஒருவரின் வாழ்க்கைத் துணை, மகன், மகள் அல்லது பெற்றோர் வேட்பாளர் ஒருவரின் மகனின் அல்லது மகளின் வாழ்க்கைத் துணை என்போர் பின்வருவனவற்றை செய்தலாகாது. வாக்குக் கேட்டு வீடுகளுக்குச் செல்லல், கட்சியொன்றுக்கு அல்லது வேட்பாளர் ஒருவருக்கு தேர்தல் ஒன்றில் வாக்களிக்க வேண்டாம் என வசப்படுத்தல். துண்டுப்பிரசுரம், ஒட்டு விளம்பரம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவித்தல் சித்திரம், புகைப்படம், சின்னத்தைக் காட்சிப்படுத்தல் அல்லது வழங்குவதால் 100 ரூபா குற்றப்பணத்துக்கும் ஒருமாத கால மறியல் தண்டனைக்கும் ஆளாகலாம்.

**67 வது பிரிவு**

குடியியல் தகுதியிழந்த ஒருவர் மற்றொருவர் சார்பில் வாக்குக் கேட்டல், உரைத்தல், பிரதிநிதித்துவம் செய்தல் மற்றும் தேர்தல் ஒன்றில் எவ்வகையிலாவது கலந்து கொள்வது தவறாகும். இதனால் 1000 ரூபா குற்றப்பணத்திற்கும் 6 மாத கால மறியல் தண்டனைக்கும் ஆளாகலாம்.

**07. இரகசியத் தன்மை**

**76 வது பிரிவு**

வாக்குச் சாவடியில், எண்ணும் நிலையத்தில் அலுவலர்கள் முகவர்கள் மற்றும் எழுதுனர்கள் ஆரம்பத்தில் இரகசியம் பேணுவதற்கான நியதிச் சட்டமுறையான வெளிப்படுத்துகை ஒன்றில் கையொப்பமிட வேண்டும்.

........ இலக்கமுடைய தேர்தல் மாவட்டத்திற்கான இந்த வாக்கெடுப்பில் எனக்கு வாசித்தளிக்கப்பட்ட 1981 ம் ஆண்டு 1ஆம் இலக்க நாடாளுமன்ற தேர்தல் சட்டத்தினால் தடைசெய்யப்பட்டுள்ள எச்செயலையும் செய்ய மாட்டேன் என நான் உறுதிப்பட தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்பிரிவுக்கமைய பின்வரும் செயல்கள் தடையாகும்.

- ✓ தேர்தலின் மெய்த்தன்மையைப் பேண உதவ வேண்டும் என்பதோடு வாக்குச் சீட்டுக்காக விண்ணப்பித்துள்ள, விண்ணப்பிக்காத அல்லது வாக்களித்துள்ள எவரேனும் வாக்காளரின் பெயர், இலக்கம் அல்லது அலுவலக முறையான குறியீடு பற்றிய தகவல் எதனையும் வாக்கெடுப்பு முடிவுறுவதற்கு முன்னதாக வெளியிடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ ஒரு வாக்காளர் யாருக்கு வாக்களித்துள்ளார் என்பதை அல்லது வாக்குச் சீட்டின் பின்பக்க இலக்கம் தொடர்பான தகவல்களை ஏதேனும் ஒரு சந்தர்ப்பத்தில் ஒருவருக்குத் தெரிவித்தல்.
- ✓ வாக்களித்த, அளிக்க உள்ள கட்சி அல்லது குழுக்கள் பற்றிய தகவல்களை எவருக்கேனும் வழங்குதல்.
- ✓ வாக்காளர் ஒருவர் வாக்குச் சீட்டைப் பெற்று அதைப் பெட்டியினுள் இட முன்னர் அவருடன் கதைத்தல் அல்லது கதைக்க எத்தனித்தல் தவறாகும். இதற்கு 500 ரூபா குற்றப்பணத்திற்கும், 6 மாத கால மறியல் தண்டனைக்கும் ஆளாகலாம். மேலும் குடியியல் தகுதி இல்லாதொழிக்கப்படும்.

## ஊழல் நடவடிக்கைகள்

### 01. ஆள் மாறாட்டம்.

உயிரோடு இருக்கும் அல்லது மரணித்த ஒருவருக்குப் பதிலாக தனிப்பட்ட முறையிலோ அல்லது தபால்மூலமோ வாக்களித்தலும், ஆளொருவரின் பெயரில் ஒன்றுக்கும் மேற்பட்ட முறைகளில் வாக்களித்தலும் ஆள்மாறாட்டமாகும். அதாவது,

- ✓ இதற்கென வாக்களிக்க அவசியமில்லாத வாக்குச்சாவடி ஒன்றிலிருந்து வாக்களிக்கவென வாக்குச் சீட்டு ஒன்றைப் பெற கேட்பதன் மூலம்.
- ✓ தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தல்.
- ✓ தபால் மூலம் வாக்குச் சீட்டொன்றில் குறியீடு செய்தல் போதுமானது.

இதற்காக பிடியாணை இன்றி கைது செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**02. உபசாரம் செய்தல்.**

தேர்தலுக்கு முன், பின் அல்லது இடை நடுவில் வாக்களிக்கவோ, அளிக்காதிருக்கவோ உபசரித்தல் தவறாகும். தான் அல்லது இன்னொருவரின் ஊடாக இதைச் செய்தலும் தவறாகும். இன்னொருவரின் வாக்கைப் பெறுவதும், வாக்களிக்காதிருப்பதற்கான ஒருவருக்கு உபசாரம் செய்தலும் தவறாகும்.

பின்வருவன உபசாரம் செய்வதில் அடங்கும்.

- ✓ நேரடியாகவோ அல்லது வேறு வழியில் ஏதேனும் தின்பண்டத்தை, பானத்தை, சிற்றுண்டி அல்லது உணவு வகையை வழங்குதலும் விநியோகித்தலும்.
- ✓ அவ்வாறானவற்றை பெறும் பொருட்டு உரிமப்பத்திரம் அல்லது வேறு ஏதேனும் உபாயமொன்றைக் கையாளுதல்.
- ✓ அவ்வாறானவற்றை வழங்க ஏதேனும் செலவை ஏற்பதாக உறுதியளித்தல்.
- ✓ அவ்வாறான உபசரிப்பை செய்தல் அல்லது வழங்குதல் அத்தோடு பெறல் அல்லது கிடைக்கச் செய்வதற்கான உபாயத்தை கையாளுதல் உபசாரம் செய்தலுடன் தொடர்புடைய தவறுகளாகும்.

**03. தகாத செல்வாக்கு**

வாக்குரிமையை சுதந்திரமாக பயன்படுத்த அல்லது பயன்படுத்தாதிருக்க தூண்டுதலும் வற்புறுத்தலும் தகாத செல்வாக்காகும். ஏதேனும் தேர்தலொன்றில் வாக்களிக்க அல்லது அளிக்காதிருக்க வசப்படுத்தல், வற்புறுத்தல் மற்றும் வாக்களித்தல் அல்லது வாக்களிப்பதை தவிர்ப்பதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ தகாத செல்வாக்கு செலுத்த முடியும். தாமே அல்லது அவர் சார்பில் வேறொருவரின் மூலம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவரேனுமொருவருக்கு அவர் சார்பில் வேறொருவருக்கு தகாத செல்வாக்கை செலுத்த முடியும். பலாத்காரத்தை, வன்முறையை அல்லது மட்டுப்பாட்டை நேரடியாகவோ இன்னொருவர் மூலமாகவோ செய்யலாம். இதனால் ஏற்படும் லௌகீக அல்லது ஆத்மீகஊறு, சேதம், இடையூறு மற்றும் கடத்திச்செல்வதாக பயமுறுத்தல் காரணமாக சுதந்திரமாக வாக்களிக்க தடையேற்படுத்தப்படுகிறது.

வேட்புமனுத்தாக்கலின் இறுதி தினத்திலிருந்து வாக்கெடுப்பையடுத்து வரும் தினம் வரையான காலத்தில் ஏதேனும் கட்சிக்கு அல்லது குழுவொன்றுக்கு வாக்களிக்கவோ, அளிக்காதிருக்கவோ, வசப்படுத்த சமய கூட்டமொன்றை பயன்படுத்தல், அவ்வாறான கூட்டமொன்றில் தேர்தலுக்கான துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள் சித்திரம் புகைப்படங்கள், அட்டைகள் வழங்குதல் அல்லது காட்சிப்படுத்தல், தேர்தலில் போட்டியிடும் கட்சி அல்லது குழுவொன்றிற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் புனிதத் தலமொன்றில் பொதுக்கூட்டமொன்றை நடத்துதல் தகாத செல்வாக்கினாலான தவறாகும். தேர்தல் காரணமாக சமயம் சார்ந்த நடவடிக்கைகளைச் செய்ய வேண்டாமென அச்சுறுத்துதல் அல்லது அவ்வாறான சமயத்தலங்களை அகற்றுவதாக அச்சுறுத்தல் தகாத செல்வாக்காகும்.

ஏதேனும் கட்சியொன்றிற்கு குழுவொன்றிற்கு வாக்களிக்கவோ வாக்களிக்காதிருக்கவோ அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதினால் தொழில் தருநர்:

- ✓ தொழிலை இல்லாதொழித்தல் அல்லது அவ்வாறு செய்வதாக பயமுறுத்தல்
- ✓ தொழிலில் ஈடுபட்டிருக்கையில் அனுபவிக்கவுள்ள நன்மைகள், சேவைகளை நிராகரித்தல் அல்லது அதைச் செய்வதாக பயமுறுத்தல் தகாத செல்வாக்காகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4. இலஞ்சம்

- வாக்களிக்க அல்லது வாக்களிக்காதிருக்க ஒரு வாக்காளரை வசப்படுத்த வழங்கும் "கொடுப்பனவாகும்". அது மறைமுக கொடுப்பனவாக இருக்கலாம். வாக்காளருக்காக இன்னொருவருக்கு வழங்கும் கொடுப்பனவும் இதில் அடங்கும்.
- அவ்வாறான தொகை கடன் அல்லது கடன் கொடுப்பதற்கான வாக்குறுதியாக இருக்கலாம். அதைப்பெற்றுத் தருவதாக அல்லது பெற்றுத் தர முயற்சிப்பதாக உறுதியளித்தலும் இலஞ்சமாகும்.
- வாக்களித்திருத்தல் அல்லது வாக்களிப்பதிலிருந்து விலகியிருப்பதற்காக மேற்படி செயல்களைச் செய்தல் தவறுக்கு போதுமானதாகும்.
- தருவதாக வாக்குறுதியளிப்பது நியமனம் பதவி அல்லது தொழிலாக இருக்கலாம். வாக்களித்தமைக்காக அல்லது அளிக்காதிருக்க அவ்வாறு செய்தல் இலஞ்சமாகும்.
- அவ்வாறு கொடுக்கும் பொருள் (நேரடியாக அல்லது மறைமுகமாக) பரிசு, கடன், வாக்குறுதி, முன்மொழிவு அல்லது ஒப்பந்தமொன்றாகவிருப்பின் தவறாகும்.

எனவே வாக்கு சம்பாதித்துக் கொடுத்தல் அல்லது சம்பாதித்துக் கொடுப்பதாக வாக்குறுதியளித்தலும் தவறாகும்.

இலஞ்சம் பெறும் வாக்காளரும் தவறாளியாவர். தேர்தலுக்கு முன் அல்லது தேர்தல் தினத்தில் ஏதேனுமொன்றை பெறல், உடன்படல் ஒப்பந்தமொன்றுக்கு செல்வதன் மூலம் வாக்காளரும் இலஞ்சம் பெறும் தவறை செய்கிறார். மேற்கூறியவாறு நேரடியாகவோ, மறைமுகமாகவோ கோரும் நபரும் இலஞ்சம் பெறும் தவறைச் செய்கிறார். மேலும் செய்வதாக வாக்குறுதியளிக்கும் நபரும் இலஞ்சம் கொடுத்தல் தவறைச் செய்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 5. ஊழல் நடவடிக்கைகள் மீதான தண்டனைகள்

ஆள்மாறாட்டம், ஆள்மாறாட்டத்திற்கு தூண்டுதல், உபசாரம் செய்தல், தகாத செல்வாக்கு, இலஞ்சம், நற்பெயருக்கு கலங்கம் விளைவித்தல் மற்றும் ஒரு வேட்பாளர் வாபஸ் பெற்றதான பொய்யான செய்திகளைக் கூறல், தேர்தல் ஊழல் நடவடிக்கைகளுடன் தொடர்புடைய தண்டனைக்கு ஏதுவாகிறது. ஆள்மாறாட்டம் செய்வதால் 500 ரூபா குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாத கால மறியற்றண்டனை அல்லது இவ்விரண்டிற்கும் ஆளாகலாம்.

- இவற்றுக்கான வழக்குகள் மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும்.
- வழக்குத் தொடர சட்டமா அதிபரின் அனுமதி தேவை.
- குற்றந்தீர்ப்பளிக்கப் பட்டால் ஏனைய தண்டனைகளுக்கு மேலதிகமாக ஏழு ஆண்டுகளுக்கு குடியியல் தகுதி இல்லாதொழிக்கப்படும்.

## சட்ட விரோத நடவடிக்கைகள்

### 1. கொடுப்பனவும் வாக்காளர்களின் போக்குவரத்தும்

தேர்தலொன்றின் போது மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் அல்லது செலவுகள் சட்ட விரோத நடவடிக்கையாகவே கருதப்படும்.

✓ வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து அல்லது வாக்கெடுப்பு நிலையத்திற்கு வாக்காளர்களின் போக்குவரத்துக்கென ஏதேனும் வகையில் கட்டணத்தை செலுத்துதல் செலுத்துவதாக ஒப்பந்தமொன்றிற்கு வருதல் சட்ட விரோத நடவடிக்கையாகும். (தேர்தல்கள் ஆணையாளரின் பணிப்புரைக்கு அமைய அரசினால் வழங்கப்படும் பொது போக்குவரத்து சேவை இதற்கு ஏற்புடையதாகாது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ துண்டுப்பிரசுரங்கள், விளம்பரங்களைக் காட்சிப்படுத்த இடமொன்றைப் பயன்படுத்துவதால் வாக்காளரொருவருக்கு கொடுப்பனவை செய்தல் அல்லது செய்வதாக ஒப்பந்தம் செய்தல் சட்ட விரோதமாகும்.
- ✓ தேர்தலுக்கு முன், பின் அல்லது இடைநடுவில் கொடுப்பனவொன்றை செய்தல் அல்லது செய்வதாக ஒப்பந்தம் மற்றும் கொடுப்பனவொன்றை பெறல், ஒப்பந்தத்தில் பங்காளராதல்.
- ✓ வாக்கெடுப்பிற்கு ஒரு மணித்தியாலத்திற்கு முன்னரும் வாக்கெடுப்பு முடிவடைந்து ஒரு மணித்தியாலத்திற்கு பின்னருமான கால எல்லையினுள் வாக்கெடுப்பு நிலையத்திற்கு அல்லது அங்கிருந்து வாக்காளர்களுக்கு போக்குவரத்திற்கான வசதிகள் செய்து கொடுத்தலாகாது.

**மேற்படி நடவடிக்கைகள் சட்ட விரோதமானவையாக அமையாத சந்தர்ப்பங்கள்**

- ✓ ஒரு வாக்காளர் தன்னுடைய வியாபார நடவடிக்கை நிமித்தமாக கட்டணம் அறவிட்டு துண்டுப் பிரசுரங்களையும் ஒட்டு விளம்பரங்களையும் அச்சிடல்.
- ✓ ஆறு அல்லது கடலைக்கடக்காது வாக்களிக்க முடியாத சந்தர்ப்பத்தில் வாக்காளர்களுக்கு ஆறு அல்லது கடலை கடக்க உதவுதல்.
- ✓ பொதுப் போக்குவரத்துச் சாதனமொன்றில் கட்டணம் செலுத்தி வாக்களிக்கச் சென்று வருதல்.
- ✓ தேர்தல் தினத்திற்கு ஏழு தினங்களுக்கு முன் தெரிவத்தாட்சி அலுவலரிடமிருந்து பெறப்பட்ட எழுத்து மூல அனுமதியுடன் வலது குறைந்த ஒருவருக்கு வாக்களிக்கச் சென்று வருவதற்கான பிரயாண வசதி செய்து கொடுத்தல். ( வேட்பாளரொருவர் வாக்காளர் சார்பில் அவ்வாறான எழுத்து மூல அனுமதியைக் கோரலாகாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ சட்ட விரோதமாக நபர்களை ஏற்றிச் செல்லும் போது பொலிஸ் உத்தியோகத்தரொருவருக்கு அவருடைய வழிகாட்டலில் அல்லது முறைப்பாடொன்றின் பேரில் குறித்த வாகனத்தை கைப்பற்றி வாக்கெடுப்பு முடிவடையும் வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்க முடியும்.
- ✓ சட்ட விரோத நடவடிக்கையொன்றுக்கு குற்றவாளியானால் அதற்கென பயன்படுத்தப் பட்ட வாகனத்தை பறிமுதல் செய்ய மேல் நீதிமன்றத்திற்கு அதிகாரமுண்டு.

## 2. பொய்யான அறிவித்தல்களை வெளியிடுதல்

செய்தியொன்றை சஞ்சிகை, துண்டுப்பிரசுர வெளியீடு அல்லது பருவ வெளியீடொன்றின் மூலம் பொய்யான எதையேனும் செய்தியை வெளியிடுவதாகும். அச் செய்தியானது சம்பந்தப்பட்ட தேர்தலில் போட்டியிடும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் அரசியல் கட்சி, சுயேட்சைக் குழு அல்லது வேட்பாளரொருவரின் தேர்தல் பற்றிய உரைத்தலுடனோ அல்லது நடவடிக்கைகளுடனோ சம்பந்தப்பட்டிருக்கலாம். அது தேர்தல் முடிவுகளில் தாக்கத்தை செலுத்துவதாக இருத்தல் வேண்டும்.

அச் செய்தியின் உரிமையாளர், முகாமையாளர், பதிப்பாசிரியர், வெளியீட்டாளர் அல்லது ஆசிரியர் இதற்கு பொறுப்பு கூறவேண்டியவராவர். தேவையான தகவல்களை நிரூபிப்பதன் மூலம் ஒவ்வொருவரும் தாங்கள் குற்றமற்றவர்கள் என்பதை உறுதிப்படுத்தலாம்.

## 3. கொடுப்பனவுக்கு ஆட்களை அமர்த்துதல்

ஒரு வேட்பாளர் அவருடைய தேர்தல் நடவடிக்கைகளுக்காக சட்டத்தால் தெரிவிக்கப்பட்டதற்கு அமையவே ஆட்களை ஈடுபடுத்த முடியும். வாக்குச்சாவடி முகவர்கள், வாக்கு எண்ணுமிட முகவர்கள், எழுதுநர்கள் மற்றும் வேலையாட்களை அவ்வாறு பணியில் ஈடுபடுத்த முடியும். குறிப்பீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ள எண்ணிக்கைக்கு மேலதிகமாக ஆட்களை அமர்த்துதல் சட்ட விரோதமானதாக கருதப்படும்.

### 4. அச்சுப்பதிப்புக்களில் பெயரைக் குறிப்பிடுதல்

தேர்தல் பற்றி குறிப்பிட்டு வெளியிடப்படும் ஒட்டு விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள், அறிவித்தல்கள் அல்லது விளம்பரங்களில் அச்சிட்டவர் அல்லது வெளியிட்டவரின் பெயர்களும் முகவரிகளும் குறிப்பிடப்பட வேண்டும். அவ்வாறான வெளியீடு ஒன்று ஒட்டுவதற்கு அல்லது அச்சிடுவதற்கு வற்புறுத்தும் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கும் வேட்பாளர் அல்லது அவரின் முகவர் சட்ட விரோத நடவடிக்கைக்கு குற்றவாளியாவார்.

### 5. சட்ட விரோத நடவடிக்கைளுக்கு தண்டனைகள்

மேல் நீதிமன்றத்தினால் குற்றந் தீர்ப்பளிக்கப்பட்டால் குற்றப்பணமாக ரூபா 300 செலுத்த வேண்டியதோடு அன்றைய தினத்திலிருந்து அடுத்துவரும் மூன்று ஆண்டுகளுக்கு குடியியல் தகுதி இல்லாதொழிக்கப்படும். உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தால் உறுப்பினர் நிலை இல்லாதொழிக்கப்படும். சட்ட விரோத நடவடிக்கை தொடர்பாக வழக்குத் தொடர சட்டமா அதிபரின் அனுமதி அவசியம்.

### தண்டனைச்சட்டக் கோவையின் கீழான தவறுகள்

இலங்கை தண்டனைச் சட்டக் கோவையின் 1×அ ஆம் அத்தியாயத்தில் 169 (அ) தொடக்கம் 169 (ஏ) வரையான பிரிவுகளில் வாக்கெடுப்புடன் தொடர்புடைய தவறுகளும் தண்டனைகளும் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அதற்கமைய,

1. வாக்களிக்கத் தூண்டும் வகையில் காணிக்கை கொடுத்தல், வாக்களிப்பதை அல்லது அளிக்கவிருப்பதை தூண்ட எத்தனிக்கும் வகையில் பரிசுப்பொருளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிக்கை வெகுமதியை ஏற்றல் மற்றும் இலஞ்சம் கொடுத்தல் இதிலடங்கும். இதன் பொருட்டு மேல் நீதிமன்றத்தில் குற்றந் தீர்ப்பளிக்கப்பட்டால் தண்டனையாக ரூபா 500 மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாகலாம்.

2. வாக்கைச் சுதந்திரமாகப் பயன்படுத்துவதற்கு விரும்பியே தடையேற்படுத்தும் அல்லது தடையேற்படுத்த எத்தனிக்கும் ஒருவர் அதிகார துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் தவறைச் செய்கிறார். அதாவது ஒரு வாக்காளருக்கு இவ்வாறான நட்டத்தையேற்படுத்த அச்சுறுத்தல் மற்றும் தான் அல்லது தன்னுடைய கவனிப்பை பெறும் நபர் தெய்வக்குற்றத்திற்கோ, சமய ரீதியான குற்றச்சாட்டிற்கோ இலக்காக முடியுமென்ற வேட்பாளர் அல்லது வாக்காளரின் சிந்தனைக்கமைய செயற்படுவதையே இங்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது தவறான மனப்பான்மை, தவறான வதந்திகளைப் பரப்புதல் இதிலடங்கும். இதன் கண் குற்றத்தீர்ப்பளிக்கப் பட்டால் ரூபா 300 மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாகலாம்.

3. வாக்கெடுப்பொன்றின் போது உயிருடனிருக்கும் அல்லது மரணித்த ஒருவரின் பெயரால் வாக்குச் சீட்டொன்றைக் கேட்டல், அதே பெயரில் வாக்களித்தல் அல்லது அவ்வாறானதொரு நடவடிக்கைக்கு பக்கபலமாக இருத்தல், இருக்க எத்தனித்தல் இன்னொருவர் சார்பில் தோன்றுதலாகும். இதன்கண் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டால் ரூபா 300 மேற்படாத குற்றப்பணத்திற்கு ஆளாகலாம்.

**தேர்தல்களில் அரச சொத்துக்களைத் தவறாகப் பயன்படுத்துதல்**

அமைச்சுக்கள், கூட்டுத்தாபனங்கள், திணைக்களங்கள் அடங்கலாக அரசுக்குச் சொந்தமான சகல விதமான அசையும், அசையா சொத்துக்கள், அரச சொத்துக்கள் அல்லது பொதுச் சொத்துக்களாக அறியப்படுகின்றன. அரசகாணிகள், கட்டடங்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகனங்கள், மக்களின் பணம் அத்துடன் அரச நிறுவனங்களின் பொறுப்பிலுள்ள ஏனைய பொருட்கள் இவற்றில் அடங்குகின்றன. தேர்தலொன்றின்போது இந்த அரச சொத்துக்களை ஏதாவதொரு கட்சி,குழு அல்லது வேட்பாளர் ஒருவரின் அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் சட்ட விரோதச் செயலாகவும், தேர்தல் சட்டத்தை கடுமையாக மீறும் செயலாகவும் காணப்படுகிறது.

1982ஆம் ஆண்டின் 12 இலக்க, பொதுச் சொத்துக்களுக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் கீழ் ஏதேனும் பொதுச்சொத்தை தனிப்பட்ட நடவடிக்கை ஒன்றுக்காகப் பயன்படுத்துதல் தவறாகும். இது ஓராண்டு முதல் இருபது ஆண்டுகள் வரையான சிறைத்தண்டனைக்குரிய குற்றமாகும்.

அரச அலுவலர் ஒருவர் பொதுச்சொத்தினை தன்னுடைய அல்லது இன்னுமொருவருடைய தனிப்பட்ட நலனுக்காகப் பயன்படுத்துவாராயின் திருத்தப்பட்டதான 1994 ஆண்டின் 20 இலக்க இலஞ்ச சட்டத்தின் 70 பிரிவின்படி ஊழல் தவறாகக் கருதப்படும். அதன்படி, அரச அலுவலர் ஒருவர் தனது பொறுப்பில் அல்லது மேற்பார்வையில் பொதுச் சொத்துக்களை அரசியல் பிரசார நடவடிக்கைக்காகப் பயன்படுத்த அனுமதித்தல் பாரதூரமான குற்றமாகும்.

தேர்தல் ஆணையாளரினால் வெளியிடப்பட்டுள்ள 2015.06.29ஆம் திகதிய PE/2015/4 எனும் இலக்க சுற்றறிக்கையில் பொதுச்சொத்துக்களை தேர்தல் நடவடிக்கைக்காகப் பயன்படுத்துதல் தடையெனக் கூறப்பட்டுள்ளது. அதாவது,

01 அரச வாகனங்கள் (மோட்டார் வாகனங்கள், ஜீப் வண்டிகள், பஸ் வண்டிகள், ஹெலிகப்டர், விமானங்கள் அடங்கலாக) கட்சிகள், குழுக்கள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல், பிரசார நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படுதல் தடை செய்யப்பட்டுள்ளது. அமைச்சரவை அலுவலகம் மற்றும் பதவிநிலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலர்களுக்காக வழங்கப்பட்டுள்ள வாகனங்களையும் தேர்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்தல் கூடாது.

02 அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தொடர்ந்தும் பதவிவகிப்பதன் காரணமாக அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்களைப் பயன்படுத்த முடிந்தாலும், அவற்றில் கொடிகளைப் பறக்க விடுதல், ஸ்ரிக்கர் ஒட்டுதல் மற்றும் சுவரொட்டிகளைக் காட்சிப்படுத்துவதை தவிர்த்தல் வேண்டும்.

03 மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் தவிர்ந்த, கராஜ் இலக்கங்கள் அல்லது வேறு போலியான இலக்கங்கள் கொண்ட வாகனங்கள் பயன்படுத்துவதை அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும், ஏனைய சகல வேட்பாளர்களும் தவிர்த்தல் வேண்டும்.

04 அரச அலுவலகங்கள், அரச கட்டிடங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய கட்டடங்களை தேர்தல் தொடர்பான கலந்துரையாடல்கள் மற்றும் மேம்பாட்டுக்காக பயன்படுத்துதல் தடைசெய்யப்பட்டுள்ளது. அரசின் சுற்றுலா விடுதிகள், விடுமுறை விடுதிகள், வாடிவீடுகள் ஆகியவற்றை வேட்பாளர்களின் தேர்தல் நடவடிக்கைகளுக்கென இலவசமாக பெற்றுக்கொடுத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது.

05 தேர்தல் காலத்தில் அரசின் பணத்தை செலவிட்டு நடாத்தப்படும் பல்வேறு நடமாடும் சேவைகள், கணகாட்சிகள் மற்றும் அங்குரார்ப்பண நிகழ்வுகளை வேட்பாளர்களின் பங்கேற்புடன் நடாத்தப்படுவதை தவிர்த்தல் வேண்டும். அவசியமாக நடத்த வேண்டிய வைபவங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் தேர்தல் ஆணையாளரை அறிவுறுத்தல் வேண்டும்.

06. தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் அரச காணிகளைப் பகிர்ந்தளித்தல், அரச காணிகளுக்கான உறுதிகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குதல், பயிர்ச்செய்கைக்கான உர மானியம் வழங்குதல், விவசாய உபகரணங்கள் வழங்குதல், சுய தொழிலுக்கான உபகரணங்கள் வழங்குதல், கடன் மற்றும் இழப்பீட்டுத் தொகை வழங்குதல் மற்றும் வீட்டுக் கடனுக்கான பத்திரங்கள் வழங்குதலும் தடைசெய்யப்பட்டுள்ளது.

07. தேர்தல் காலத்தில் ஏற்கனவே ஏற்பாடு செய்துள்ள வைபவங்களை நடத்துதல் கூடாது. மேலும், அரச அலுவலர்களை தேர்தல் நடவடிக்கையில் ஈடுபடுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

08. அரச அலுவலர்கள் அலுவலக நேரத்தில் அல்லது அலுவலக நாட்களில் லீவு பெற்று தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் கூடாது.

09. அமைச்சின் செயலாளர்கள் அடங்கலாக அரசியல் நலன்களுக்கு உரித்தல்லாத அரசாங்க பதவிநிலை அலுவலர்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களின் பதவிநிலை அலுவலர்கள், அதிபர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், கிராம அலுவலர்கள், பாதுகாப்பு பிரிவு அலுவலர்கள் அலுவலக நேரத்திலும், பிற நேரங்களிலும் மற்றும் விடுமுறை நாட்களிலும் தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

10. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டதாக முறையான பகிரங்க அறிவித்தல் அல்லது வர்த்தமான அறிவித்தல் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு மேற்கொள்ளப்படும் ஆட்சேர்ப்புகள், நியமனங்கள், பதவி உயர்வுகள் இடமாற்றங்கள் தவிர்ந்த, தேர்தல்களுக்கான வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில் அரசாங்க சேவை ஆணைக்குழு அல்லது தேர்தல் ஆணையாளரின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கீகாரம் இன்றி எந்தவொரு ஆட்சேர்ப்பு, நியமனம் வழங்கல் மற்றும் பதவி நீக்குதலைச் செய்யக் கூடாது.

11. தேர்தல் காலத்தில் பிற்தேதியிட்டு நியமனம் அல்லது பதவி உயர்வு வழங்குதல் தேர்தல் சட்டத்தை மீறும் செயலாகும்.

அரசினுடைய அபிவிருத்திக் கருத்திட்டங்களை வேட்பாளர்களின் மேம்பாட்டுக்காக பயன்படுத்தக் கூடாதென்பதையும் தேர்தல் ஆணையாளர் மேற்படி சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ப.்.வ்ரல்


ப.்.வ்ரல்
12/3, ரொபட் குணவர்தன மாவத்தை, கொழும்பு 06.
தொலைபேசி: 011-2514441/2 தொலைநகல்: 011-2514443
மின் அஞ்சல்: paffrel@sltnet.lk இணையத்தளம்: www.paffrel.lk



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org